2011 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய அம்மா என்ன செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் எங்கள் அய்யா என்ன செய்திருக்கிறார் என்று கேட்டீர்கள் என்றால், திருவள்ளூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்காக, 7 கட்டடங்கள் மற்றும் இரண்டு நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்குமான கருத்துரு உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, உயர் நீதிமன்றத்தில் இருந்து செயற்குறிப்பு பெறப்பட்டு இப்போது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் நிதியொதுக்கம் பெற்று பணிகள் நடைபெறும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.*

திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், தரங்கம்பட்டியில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு அறிவித்தார்கள். அதற்குத் தேவையான முன்மொழிவுகள் அனைத்தும் அரசிற்கும் உயர் நீதிமன்றத்திற்கும் அனுப்பப்பட்டுவிட்டன. அதனுடைய நிலைமை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *குறிப்பாக, சிறப்பாக அதைக் கேட்டிருக்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் விவரத்தைச் சேகரித்து உடனடியாகத் தெரிவிக்கலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

32—

தொழில்நுட்பக் கல்லூரி

***104968—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 9

(அ) மானாமதுரை தொகுதியில் பெண்கள் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மானாமதுரை தொகுதியில், பெண்கள் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியானது, மிகவும் பின் தங்கிய தொகுதி. வறட்சியான பகுதி. இங்கே ஏழையெளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். இந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் விவசாயத்தை நம்பித்தான் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். வேறு தொழிற்சாலைகளோ, தொழிலோ எதுவும் கிடையாது. அப்படிப்பட்டச் சூழ்நிலையில் அங்கேயுள்ள பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளைப் படிக்க வைப்பதற்கு, வெளி ஊர்களுக்கு அனுப்ப வேண்டிய ஒரு சூழ்நிலைதான் இருக்கிறது. தொகுதிச் சீரமைப்பில் இளையான்குடி ஒன்றியத்தை, மானாமதுரை தொகுதியில் சேர்த்தாலும்கூட, அந்தப் பகுதியில் கல்லூரிகள் கிடையாது. சில சுய நிதிக் கல்லூரிகள்தான் இருக்கின்றனவேயொழிய, அரசுக் கல்லூரி எதுவும் கிடையாது. ஆகவே, அந்தப் பகுதியில், ஏழையெளிய மக்களின் நலனைக் கருதியும், விவசாயப் பெருமக்களின் நலனைக் கருதியும்—அந்தப் பகுதியிலே கல்லூரிகள் அமைப்பதற்கான இடங்கள், போக்குவரத்து வசதி, தண்ணீர் வசதி போன்ற வசதிகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் இதுவரை எந்த அரசுக் கல்லூரியும் கிடையாது—மானாமதுரையில் ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2011 பிப்ரவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை அமைந்துள்ள சிவகங்கை மாவட்டத்தில், 10 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அது ஒரு சிறிய மாவட்டம். ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, ஓர் அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி, ஒரு அரசு உதவி பெறும் அண்ணாமலை தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவை அங்கே இயங்கிக்கொண்டிருக்கின்றன. பக்கத்தில் இருக்கிற மதுரை மாவட்டத்திலேகூட பெண்களுக்கான பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைந்திருக்கிறது. புதுக்கோட்டையில் மட்டும் 20–க்கும் மேற்பட்ட பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் அமைந்திருககின்றன. ஆகவே, தென் மாவட்டங்களைப் பொறுத்தவரையில், பெரும்பாலும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், அரசு கலைக் கல்லூரிகள், அந்தக் காலத்தில் இருந்தே அதிகமாக இருக்கின்றன. வட மாவட்டங்களில்தான் இன்னும் இதை அதிகரிக்க வேண்டிய அவசியமும் கட்டாயமும் இருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கத்தினுடைய திட்டப்படி எந்தெந்த மாவட்டங்கள் கல்வியில் பின்தங்கியிருக்கின்றன என்று கணக்கெடுக்கப்பட்டு, அந்த அடிப்படையில் 27 மாவட்டங்கள் கண்டறியப்பட்டு, அங்கே பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை உருவாக்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதிலே, 8 மாவட்டங்களில் இப்பொழுது இந்தக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வருங்காலங்களில், பின்தங்கிய தொகுதிகளில் இதுபோன்ற பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டமே ஒரு வறட்சியான மாவட்டம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றபொழுது காரைக்குடியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி இருக்கிறது என்று

சொன்னார்கள். காரைக்குடியானது, மானாமதுரையிலிருந்து 85 கி.மீ. தூரம் செல்ல வேண்டி இருக்கிறது. மதுரையிலிருந்து 52 கி.மீ. தூரம் செல்லவேண்டி இருக்கிறது. ஆக, எங்களுடையது வறட்சியான மாவட்டமாக இருக்கின்ற காரணத்தினாலும், மானாமதுரை ஒரு வறட்சியான பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலும், அங்கு பெரும்பாலும் விவசாயப் பெருங்குடி மக்கள், தொழிலாளர்கள், உழைப்பாளிகள், பாட்டாளி மக்கள்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய பிள்ளைகள் அதிக தூரம் சென்று படிக்கக்கூடிய வாய்ப்பு அமைகின்ற நேரத்தில் அவர்கள் அங்கு செல்வதற்கான செலவுத் தொகை அதிகமாக இருக்கின்றது. அதேபோல, அங்கே இருக்கின்ற தனியார் கல்லூரிகளில் சேரும்போது, அதற்கான கட்டணங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால்தான், மானாமதுரையில் ஒரு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கின்றேன். வருங்காலத்தில் அந்தப் பகுதியில் அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அங்குள்ள சிப்காட் வளாகத்தில் அதிகமான இடம் இருக்கிறது. அந்தப் பகுதியில் குடிநீர், போக்குவரத்து வசதிகளும் இருக்கின்றன. ஆகவே, மானாமதுரைக்கு முன்னுரிமை கொடுத்து அங்கே ஒரு பெண்கள் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இதுவரை இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து எத்தனை பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன, எத்தனை பெண்கள் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வி, பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள்

2011 பிப்ரவரி 9]

பற்றியது. அதிலும் குறிப்பாக, பெண்களுக்கான பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கவேண்டும் என்பதாகும். இப்பொழுது இருக்கின்ற கல்லூரிகளெல்லாம் co-education institutions ஆக இருபாலரும் படிக்கின்ற கல்லூரிகளாகத்தான் இருக்கின்றன. அதிலும், இப்போது பார்த்தீர்களென்றால் பெரும்பாலான கல்லூரிகளில் ஆண்களுடைய எண்ணிக்கையைவிட பெண்களுடைய எண்ணிக்கைதான் அதிகமாக இருக்கிறது. உதாரணத்திற்கு, நேற்று நான் பி.எட். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு, அந்த பட்டமளிப்பு விழாவிலே பரிசு பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கியபொழுது, மொத்தம் 78 பேர்கள் பரிசு பெற்றார்கள். அதிலே 75 பேர்கள் பெண்கள். 3 பேர்கள்தான் ஆண்கள் என்பது பெண்களுக்கு பெருமை தரக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. தமிழகத்தினுடைய கல்வி வளர்ச்சியிலே, பெண்கள், கல்வியிலே நிறைய வளர்ச்சியடைந்திருக்கிறார்கள். ஆக, co-education institutions–ல்தான் அதிகமான strength. உங்கள் மாவட்டத்திலே இருக்கின்ற பலவகை கல்லூரிகளில், 1,250 இடங்கள் இன்னும் காலியாக இருக்கின்றன. அவைபோக, நிரப்பப்பட வேண்டிய இடங்களும் இருக்கின்றன. இந்த அரசைப் பொறுத்தவரையில், நிறைய பொறியியல் கல்லூரிகளும் தொடங்கியிருக்கின்ற காரணத்தினால், +2 படித்துவிட்டு அங்கு செல்கிறார்கள். பாலிடெக்னிக் முடித்துவிட்டு, lateral entry–க்கு வருகிறார்கள். அதனால் மாணவர்களுடைய எண்ணிக்கை, அவர்களுடைய தேவைக்கேற்ப அந்தந்த இடங்களில் இதுபோன்ற கல்லூரிகளைத் தொடங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக பெண்களுக்கென்று தனியாக அமைப்பதைவிட, co-education institutions என்று அமைத்தால், அந்தப் பகுதியிலுள்ள எல்லோருக்கும் அது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்ற எண்ணத்தில்தான், இங்கே பலவகை கல்லூரிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்த அரசு பொறுப்பேற்றபின்பு, நான் முன்பே தெரிவித்ததுபோல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதன் விளைவாகத்தான் பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதேபோல, பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

[2011 பிப்ரவரி 9

தமிழ்நாட்டில் 5 ஆண்டுகளுக்கு முன்பு படித்துப் பட்டம் பெறும் வாய்ப்பைப் பெற்றவர்கள், 2,82,802 பேர். ஆனால் இந்த ஆண்டு படித்துக்கொண்டிருக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 6,06,752 என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. ஷிப்ட் முறையின்மூலமாக இவையெல்லாம் நடக்கின்றன. ஆகவே, பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், தேவைகளுக்கேற்ப, மாவட்டங்களுடைய பின்தங்கிய நிலைமைக்கேற்ப, வருங்காலங்களில் அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரிதேவி.

டாக்டர் (திருமதி) கே. காயத்ரிதேவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களைப் பொருளாதாரரீதியில் தன்னிறைவு பெறுபவர்களாக்கும் விதத்தில், பெண்களுக்காக கிராமப்புறங்களில் தொடங்கப்படும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு மத்திய அரசிலிருந்து சிறப்பு மானியம் வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு பின்தங்கிய மாவட்டங்களைத் தெரிந்து, அறிந்துதான் 27 மாவட்டங்களை அறிவித்திருக்கிறது. அதிலே 8 மாவட்டங்களில் தொடங்கப்பட்டிருக்கின்றன. பெண்களுக்கென்று இதுமாதிரி சலுகைகளை மத்திய அரசு கொடுக்குமானால், நிச்சயமாக மாநில அரசு அதைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறாது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.